



# தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை

## மானியக் கோரிக்கை எண்.28

## செய்தி மற்றும் விளம்பரம்

❖

## மானியக் கோரிக்கை எண். 30

## எழுதுபொருள் மற்றும் அச்சு

# அறிவிப்புகள்

# 2021–2022

# தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை

மானியக் கோரிக்கை எண். 28

## செய்தி மற்றும் விளம்பரம்

❖

மானியக் கோரிக்கை எண். 30

## எழுதுபொருள் மற்றும் அச்சு

## அறிவிப்புகள்
## 2021 – 2022


**மு.பெ.சாமிநாதன்**

**செய்தித் துறை அமைச்சர்**

# தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை

## மானியக் கோரிக்கை எண். 28

## செய்தி மற்றும் விளம்பரம்

அறிவிப்புகள்

2021 – 2022

1. தாய்நாட்டின் விடுதலைக்காகப் போராடிய தியாகிகள், மொழிப்போர்த் தியாகிகள், தலைசிறந்த இலக்கியப் படைப்பாளிகள், சமூகநீதிக்காகப் போராடியவர்கள், முன்னாள் குடியரசுத் தலைவர், திராவிட இயக்க முன்னோடிகள் ஆகியோரைப் போற்றும் வகையில் தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் திருவுருவச்சிலைகள் நிறுவப்படும்.

1. தமிழ்நாட்டில் ஆங்கிலேயர்களின் ஆட்சியினை எதிர்த்து தீரமாய்ப் போரிட்டுத் தூக்குக் கயிற்றினை ஏற்றுக்கொண்ட விடுதலைப் போராட்ட மாவீரர் பாஞ்சாலங்குறிச்சி குறுநில மன்னர் வீரபாண்டிய கட்டபொம்மன் அவர்களுக்குச் சென்னை கிண்டி காந்தி மண்டப வளாகத்தில் திருவுருவச்சிலை அமைக்கப்படும்.

2. தாய்நாட்டின் விடுதலைக்காக ஆங்கிலேயர்களை எதிர்த்து விடுதலை வேள்வியில் தீர்க்கமாய்ப் போரிட்ட சிவகங்கைச் சீமையை ஆண்ட மருது சகோதரர்களுக்குச் சென்னை கிண்டி காந்தி

மண்டப வளாகத்தில் திருவுருவச்சிலை அமைக்கப்படும்.

3. இந்திய விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்ட தியாகி, ஒத்துழையாமை இயக்கத்தில் பங்கேற்றத் தென்னிந்தியாவின் முதல் பெண்மணி, அண்ணல் காந்தியடிகளால் தென்னிந்தியாவின் ஜான்சிராணி என்று அழைக்கப்பட்ட சுதந்திரப் போராட்ட வீராங்கனை அஞ்சலை அம்மாள் அவர்களுக்குக் கடலூரில் திருவுருவச்சிலை அமைக்கப்படும்.

4. மொழிப்போரில் தேக்குமரத் தேகத்தைத் தீக்கிரையாக்கி, இந்தித் திணிப்பினை எதிர்த்து முதன் முதலில் உயிர்த்தியாகம் செய்த மொழிப்போர்த் தியாகி கீழபழுவூர் சின்னசாமி அவர்களுக்கு அரியலூர் மாவட்டம் கீழபழுவூரில் திருவுருவச்சிலை அமைக்கப்படும்.

5. இந்தியாவின் தலைசிறந்த விஞ்ஞானியாகவும், இளைஞர்கள் மற்றும் மாணவர்களின் எழுச்சி நாயகனாகவும் திகழ்ந்த முன்னாள் குடியரசுத் தலைவர் டாக்டர் ஏ.பி.ஜெ. அப்துல் கலாம் அவர்களுக்கு சென்னை அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் திருவுருவச் சிலை அமைக்கப்படும்.

6. இலக்கியத்திற்கான நோபல் பரிசு பெற்றவரும், இந்தியத் திருநாட்டின் தேசிய கீதத்தை இயற்றியவருமான வங்கக் கவி ரவீந்திரநாத் தாகூர் அவர்களுக்குச் சென்னை இராணி மேரி கல்லூரியில் திருவுருவச் சிலை அமைக்கப்படும்.

7. திராவிட இயக்கத் தளகர்த்தர்களில் முன்னோடியாகவும், தலைசிறந்த இலக்கியவாதியும், முன்னாள் நிதி அமைச்சருமான, நடமாடும் பல்கலைக்கழகம்

மறைந்த நாவலர் இரா.நெடுஞ்செழியன் அவர்களுக்குச் சென்னை சேப்பாக்கம் அரசு விருந்தினர் மாளிகையில் திருவுருவச்சிலை அமைக்கப்படும்.

8. பெண் சமூகச் சீர்திருத்தவாதி, எழுத்தாளர், தேவதாசி ஒழிப்பு இயக்க மற்றும் திராவிட இயக்கத்தின் அரசியல் முன்னோடி பெண் சமூகச் சீர்திருத்தவாதி மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் அவர்களுக்கு மயிலாடுதுறையில் திருவுருவச்சிலை அமைக்கப்படும்.

9. இந்தியாவின் முதல் பெண் சட்டப்பேரவை உறுப்பினர், இந்தியப் பெண்கள் சங்கத்தின் முதல் தலைவர், தமிழ்நாட்டின் சமூக சீர்திருத்தப் பெண் மருத்துவர் டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி அம்மையார் அவர்களுக்குப் புதுக்கோட்டையில் திருவுருவச்சிலை அமைக்கப்படும்.

10. இருபதாம் நூற்றாண்டின் புகழ்பெற்ற தமிழறிஞர்களில் ஒருவரும், பல்வேறு

இலக்கியக் கட்டுரைகள், ஆராய்ச்சி நூல்கள், புதினங்கள் மற்றும் சிறுகதைகள் ஆகியவற்றைத் தமிழில் படைத்து, மதுரை காமராஜர் பல்கலைக்கழகத் துணைவேந்தராகப் பணியாற்றிய பன்முக ஆற்றல் கொண்ட தமிழறிஞர் டாக்டர் மு.வரதராசனார் அவர்களுக்கு இராணிப்பேட்டை மாவட்டத்தில் திருவுருவச்சிலை அமைக்கப்படும்.

மேற்சொன்ன தலைவர்களுக்குத் திருவுருவச் சிலைகள் நிறுவ ரூபாய் ஒரு கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

## 2. இந்தியத் திருநாட்டின் 75ஆவது சுதந்திர தின விழாவை முன்னிட்டு விடுதலைப் போராட்ட வீரர்களின் நினைவிடங்கள் மேம்படுத்துதல்

75ஆவது சுதந்திர தின விழாவையொட்டி பாஞ்சாலங்குறிச்சியில் அமைந்துள்ள வீரபாண்டிய கட்டபொம்மன் கோட்டையில் ஒலி, ஒளிக்காட்சி அமைக்கவும், சுதந்திரப் போராட்டத் தலைவர்கள் வாழ்க்கை வரலாற்றை எடுத்துரைக்கும் வகையில் குறும்படங்கள் தயாரிக்கவும், மக்களுக்குத் தொண்டாற்றிய தியாகிகளை நினைவுகூறும் வகையில் நினைவு மண்டபங்களைப் புதுப்பிக்கவும், பொதுமக்கள் அறிந்துகொள்ள உதவும் வகையில் புகைப்படக் கண்காட்சி மற்றும் ஒலி, ஒளிக்காட்சி போன்றவைகள் அமைக்கவும் நடவடிக்கை எடுக்கப்படும்.

## 3. சென்னை, காந்தி மண்டப வளாகத்தில் உள்ள தியாகச்சீலர்களின் நினைவு மண்டபங்கள் மேம்படுத்தப்படும்.

சென்னை, காந்தி மண்டப வளாகத்தில் தீயாகச்சீலர்களை நினைவுகூறும் வகையில் அமைக்கப்பட்டுள்ள காந்தி மண்டபம் மற்றும் அருங்காட்சியகம், பெருந்தலைவர் காமராஜர் நினைவு மண்டபம், பெரியவர் பக்தவத்சலம் நினைவு மண்டபம், மூதறிஞர் இராஜாஜி நினைவு மண்டபம் ஆகியவற்றை மேம்படுத்த ரூபாய் மூன்று கோடியே முப்பத்தி எட்டு இலட்சத்து எழுபதாயிரம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

4. சுதந்திரப் போராட்ட வீரர் தளி பாளையக்காரர் மலையாண்டி வெங்கிடுபதி எத்தலப்பர் நாயக்கர் அவர்களுக்குத் திருப்பூர் மாவட்டத்தில் திருவுருவச்சிலையும் அரங்கமும் அமைக்கப்படும்.

வீரபாண்டிய கட்டபொம்மனை நயவஞ்சகமாகத் தூக்கிலிட்ட ஆங்கிலேயருக்குப் பாடம் புகட்டும் வகையில், தஞ்சையிலிருந்து திருப்பூர் மாவட்டம் தளிக்கு அனுப்பப்பட்ட தூதுவர்களின் தலைவன் ஆண்ட்ரூ கேதிஷ் என்ற ஆங்கிலேயரைத் தூக்கிலிட்ட சுதந்திரப் போராட்ட வீரர் தளி பாளையக்காரர் மலையாண்டி வெங்கிடுபதி எத்தலப்பர் நாயக்கர் அவர்களது நினைவைப்போற்றும் வகையிலும், இன்றைய தலைமுறையினர் அறிந்துகொள்ளும் வகையிலும் திருப்பூர் மாவட்டத்தில் அன்னாருக்குத் திருவுருவச்சிலை மற்றும் அரங்கம் அமைப்பதற்கு ரூபாய் இரண்டு கோடியே அறுபது இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

5. பொள்ளாச்சியில் உள்ள நீர்வளத்துறையின் தலைமைப் பொறியாளர் அலுவலக வளாகத்திற்கு மறைந்த முன்னாள் மத்திய அமைச்சர் "சி.சுப்பிரமணியம் வளாகம்" என்று பெயர் சூட்டப்படும்.

பரம்பிக்குளம் ஆழியாறு பாசனத் திட்டம் உருவாக முக்கியக் காரணமாக இருந்தவர்களில் ஒருவரான திரு.வி.கே.பழனிசாமி கவுண்டர் அவர்களுக்கு ஆழியாறு அணையின் பூங்காவில் நினைவு மண்டபம் மற்றும் மார்பளவுச்சிலை அமைக்கும் பணிகள் ரூபாய் ஒரு கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது. இதனை பி.ஏ.பி. திட்டப்பணிகள் நடைபெற்றபோது ஏற்பட்ட விபத்தில் உயிர்நீத்தவர்களுக்கான நினைவுமண்டபமாக மாற்றி அமைக்கப்படும்.

மேலும், பொள்ளாச்சியில் செயல்படும் நீர்வளத்துறையின் தலைமைப் பொறியாளர் அலுவலக வளாகத்திற்கு ஒன்றிய அரசின் மறைந்த முன்னாள் அமைச்சர் "சி.சுப்பிரமணியம் வளாகம்" என்று பெயர் சூட்டப்படும்.

இவ்வளாகத்தில், விவசாயப் பெருமக்களுக்குப் பயிற்சிகள் மற்றும் கருத்தரங்கம் போன்ற நிகழ்ச்சிகள் நடத்திட ஏதுவாக **ரூபாய் நான்கு கோடி** மதிப்பீட்டில் இரண்டு அடுக்குகள் கொண்ட புதிய அரங்கு கட்டமைக்கப்படும். இவ்வரங்கத்திற்கு **"வி.கே.பழனிசாமி அரங்கம்"** எனப் பெயர் சூட்டப்படும்.

- ❖ மேல்தளத்தில் அமைக்கப்படும் அரங்கத்திற்கு **"பொள்ளாச்சி நா.மகாலிங்கம்"** அவர்களின் பெயர் சூட்டப்படும்.
- ❖ இம்மண்டபத்தில் பரம்பிக்குளம் ஆழியாறுத் திட்டப்பணிகள் குறித்துப் பொதுமக்கள் அறிந்துகொள்ளும் வகையில் **புகைப்படக் கண்காட்சி** அமைக்கப்படும்.

இவ்வளாகத்தில்

1) **வி.கே.பழனிசாமி கவுண்டர்**,
மேனாள் சட்டமன்ற உறுப்பினர்

2) முன்னாள் அமைச்சர் **சி. சுப்பிரமணியம்,**

3) தொழிலதிபர் **பொள்ளாச்சி நா.மகாலிங்கம்**,
மேனாள் சட்டமன்ற உறுப்பினர்

ஆகியோரைப் பெருமைப்படுத்துகின்ற வகையில், அன்னார்களது முழுத்திருவுருவச் சிலைகள் அமைக்க ரூபாய் முப்பது இலட்சம் என ஆக மொத்தம் ரூபாய் நான்கு கோடியே முப்பது இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

இன்றைய இளையதலைமுறையினர் நீர்மேலாண்மையின் முக்கியத்துவத்தை உணரும் பொருட்டு பரம்பிக்குளம் ஆழியாறு பாசனத்திட்டத்தை அன்றைய இந்தியப் பிரதமர் பண்டித ஜவகர்லால் நேரு அவர்கள் துவக்கிவைத்த நாளான 7.10.1961ஆம் நாளை "பரம்பிக்குளம் ஆழியாறு பாசனத்திட்ட தினம்" என அறிவித்து, ஆண்டுதோறும், இந்நாளில் அன்னார்களின் திருவுருவச் சிலைகளுக்கு அரசின் சார்பில் மாலையணிவித்து மரியாதை செலுத்தப்படும்.

**6. சென்னை மாகாணத்தின் முன்னாள் முதலமைச்சர் டாக்டர் ப. சுப்பராயன் அவர்களுக்குச் சென்னையில் முழுத்திருவுருவச் சிலையும், நாமக்கல் நகரில் அரங்கமும் அமைக்கப்படும்.**

தமிழுக்கும், தமிழக மக்களுக்கும் அயராது உழைத்தவரும், சமூகநீதிக் கோட்பாடுகளுக்காகச் சட்டவடிவம் கொடுத்தவருமான, சென்னை மாகாணத்தின் முன்னாள் முதலமைச்சர் டாக்டர் ப.சுப்பராயன் அவர்களது சேவைகளை நினைவுகூறும் வகையில், அன்னாருக்குச் சென்னையில் முழுத்திருவுருவச் சிலை அமைக்க ரூபாய் பத்து இலட்சம் மற்றும் நாமக்கல் நகரில் அன்னாரின் பெயரில் ஓர் அரங்கம் அமைக்க ரூபாய் இரண்டு கோடியே ஐம்பது இலட்சம் என ரூபாய் இரண்டு கோடியே அறுபது இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

7. கீழ்பவானி பாசனத் திட்டம் உருவாகக் காரணமாக இருந்த உத்தமத் தியாகி திரு.ஈஸ்வரன் அவர்களுக்குத் திருவுருவச்சிலை மற்றும் அரங்கம் அமைக்கப்படும்.

கொங்கு மண்டலத்தில் ஏறக்குறைய இரண்டு இலட்சம் ஏக்கர் பாசனம்பெறும் நீர்ப்பாசனத் திட்டமான கீழ்பவானி பாசனத் திட்டம் கொண்டுவர முக்கியக் காரணகர்த்தாவாக இருந்த ஈரோடு தொகுதியின் மேனாள் சட்டமன்ற உறுப்பினரும், சுதந்திரப் போராட்டத்தில் பங்கேற்றுத் சுமார் பதினொறு ஆண்டுகள் சிறைவாசம் அனுபவித்த உத்தமத் தியாகி ஐயா திரு.ஈஸ்வரன் அவர்களது நினைவைப் போற்றும் வகையிலும், இன்றைய தலைமுறையினரும் அவர் செயல்பாடுகளைத் தெரிந்துகொள்ளும் வகையிலும், ஈரோடு மாவட்டத்தில் திருவுருவச்சிலை மற்றும் அரங்கம் அமைப்பதற்கு ரூபாய் இரண்டு கோடியே அறுபது இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்

8. முன்னாள் அமைச்சரும், ஏழை எளியோரின் வாழ்க்கை முன்னேற்றத்திற்குப் பெரும் பங்காற்றி மறைந்த தலைவர் திரு.ஏ.கோவிந்தசாமி அவர்களுக்கு விழுப்புரம் மாவட்டத்தில் திருவுருவச் சிலையுடன் அரங்கம் அமைக்கப்படும்.

முன்னாள் அமைச்சரும், ஏழை எளியோரின் வாழ்க்கை முன்னேற்றத்திற்குப் பெரும் பங்காற்றி மறைந்த தனிப்பெரும் தலைவரும், **பேரறிஞர் அண்ணா மற்றும் முத்தமிழறிஞர் கலைஞர்** ஆகியோர்களின் அமைச்சரவையில் சிறப்புடன் பணியாற்றியவருமான **திரு.ஏ.கோவிந்தசாமி** அவர்களின் நினைவாக **விழுப்புரம் மாவட்டத்தில் திருவுருவச்சிலை** மற்றும் **அரங்கம்** அமைப்பதற்கு **ரூபாய் இரண்டு கோடியே அறுபது இலட்சம்** நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

**9. பத்திரிகையாளர்கள் நலன் காக்கும் வகையில் பத்திரிகையாளர்கள் நல வாரியம் அமைக்கப்படும்.**

தமிழ்நாட்டில் முதன்முறையாக, உழைக்கும் பத்திரிகையாளர்களை முன்களப் பணியாளர்களாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவித்துப் பெருமை சேர்த்துள்ளார்கள்.

அதனடிப்படையில், உழைக்கும் பத்திரிகையாளர்களுக்கு வழங்கப்பட்டு வரும் அனைத்துத் திட்டங்களையும் ஒருங்கிணைத்துச் செவ்வனே செயல்படுத்துவதோடு, நலவாரிய உதவித்தொகைகள் மற்றும் நலத்திட்ட உதவிகள் அளித்திடும் வகையில் 'பத்திரிகையாளர்கள் நல வாரியம்' அமைக்கப்படும்.

**10. பணிக்காலத்தில் இயற்கை எய்தும் பத்திரிகையாளர்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கப்படும் குடும்ப உதவி நிதி உயர்த்தப்படும்.**

பத்திரிகைத் துறையில் பணியாற்றும் ஆசிரியர், உதவி ஆசிரியர், நிருபர், புகைப்படக்காரர் மற்றும் பிழைதிருத்துவோர் பணிக்காலத்தில் இயற்கை எய்திட நேரிட்டால், அவர்களது குடும்பத்தினருக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தற்பொழுது குடும்ப உதவி நிதியாக அவர்கள் பணிபுரிந்த காலத்திற்கேற்ப ரூபாய் மூன்று இலட்சம் வரை வழங்கப்பட்டு வருகிறது. இந்தக் குடும்ப உதவி நிதி ரூபாய் மூன்று இலட்சத்திலிருந்து ரூபாய் ஐந்து இலட்சமாக உயர்த்தி வழங்கப்படும்.

## 11. பத்திரிகையாளர்களுக்குப் பயிற்சிகள்.

பத்திரிகையாளர்கள் தங்களின் துறை சார்ந்த தொழிற் தகுதியை மேம்படுத்திக் கொள்வதற்கும் திறன்மேம்பாட்டை அதிகரிக்கவும், மொழித்திறன் மற்றும் நவீனத் தொழில்நுட்பத்தில் சிறந்து விளங்கவும் மாவட்ட அளவிலும், மாநில அளவிலும் பத்திரிகையாளர்களுக்குப் பயிற்சிகள் வழங்கப்படும்.

## 12. இளம் பத்திரிகையாளர்கள் உயர்கல்வி படிக்க அரசு நிதியுதவி

இளம் பத்திரிகையாளர்கள் ஊடகத்துறையில் சிறந்து விளங்கவும், அதன் நுணுக்கங்களை முழுமையாக அறிந்துகொள்ளவும், அவர்களை ஊக்குவிக்கும் வகையில், ஆர்வமுள்ள தகுதிவாய்ந்த இளம் பத்திரிகையாளர்களைத் தெரிவுசெய்து, இந்திய அளவில் புகழ்மிக்க இந்தியன் இன்ஸ்டிடியூட் ஆப் மாஸ் கம்யூனிகேஷன்ஸ் (IIMC), ஏசியன் காலேஜ் ஆப் ஜர்னலிசம் (ACJ) போன்ற பத்திரிகை சார்ந்த கல்வி நிறுவனங்களில் உயர்கல்வி படிக்கவும், பயிற்சி பெறவும் நிதியுதவி வழங்கப்படும்.

## 13. சிறந்த இதழியலாளருக்கு "கலைஞர் எழுதுகோல் விருது"

இதழியியல் துறையில் சமூக மேம்பாட்டிற்காகவும், விளிம்பு நிலை மக்களின் மேம்பாட்டிற்காகவும் பங்காற்றிவரும் ஒரு சிறந்த இதழியலாளருக்கு ஆண்டுதோறும் "கலைஞர் எழுதுகோல் விருது" மற்றும் ரூபாய் ஐந்து லட்சம் பரிசுத்தொகையுடன் பாராட்டுச் சான்றிதழும் வழங்கப்படும்.

**14. அரசு நிகழ்ச்சிகளில் எடுக்கப்பட்ட கறுப்பு வெள்ளை மற்றும் வண்ணப் புகைப்பட நெகடிவ் சுருள்கள் டிஜிட்டல் முறையில் பாதுகாக்கவும் தற்பொழுது எடுக்கப்படும் புகைப்படங்களை ஆவணப்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்படும்.**

தமிழ்நாடு அரசின் சார்பில் நடைபெற்ற விழாக்கள் மற்றும் நிகழ்ச்சிகளில் எடுக்கப்பட்டு, புகைப்படப் பிரிவில் பாதுகாக்கப்பட்டுவரும் கறுப்பு வெள்ளை மற்றும் வண்ணப் புகைப்பட நெகடிவ் சுருள்களை டிஜிட்டல் முறையில் மாற்றியமைத்திட ரூபாய் இருபத்தைந்து இலட்சமும், மேலும், தற்போது எடுக்கப்படும் புகைப்படங்களைப் பாதுகாப்பான முறையில் சேமித்து ஆவணப்படுத்துவதற்காகக் கணினி சர்வர் மற்றும் அதற்கான துணை உபகரணங்கள் வாங்குவதற்கும் தேவையான பராமரிப்புப் பணிகளை ஒப்பந்த முறையில் எடுத்துக் கொள்வதற்கும் ரூபாய் இருபத்தைந்து இலட்சம் என மொத்தம் ரூபாய் ஐம்பது இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

**15. அரசின் செயல்பாடுகள் மற்றும் திட்டங்களைப் பொதுமக்கள் அறிந்து பயன்பெற்றிடும் வகையில் சமூக ஊடகப் பிரிவு என்ற தனிப்பிரிவு உருவாக்கப்படும்.**
**அரசின் விளம்பரங்களுக்கு மின் சுவர்கள் உருவாக்கப்படும்.**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் செய்தி வெளியீடுகள், சாதனைகள் (ம) நிகழ்ச்சிகள் தொடர்பான செய்திகள் மற்றும் புகைப்படங்கள் ஆகியவற்றைக் கீச்சகம் (Twitter), படவரி (Instagram), முகநூல் (Facebook) மற்றும் வலையொளி (YouTube) ஆகிய சமூக ஊடகங்களின் வாயிலாக உடனுக்குடன் பொதுமக்களுக்குக் கொண்டு செல்வதற்கு ஏதுவாக, சமூக ஊடகப் பணிகளை மேற்கொள்வதற்கு செய்தி மக்கள் தொடர்புத்துறையில் **சமூக ஊடகப் பிரிவு என்ற தனிப்பிரிவு புதியதாக உருவாக்கப்படும்.**

அரசின் செய்திகள் மற்றும் திட்டங்கள் குறித்த விவரங்கள் உடனுக்குடன் பொதுமக்களை

சென்றடையக் கூடிய வகையில், பொதுமக்கள் கூடும் முக்கிய இடங்களான பேருந்து நிலையம், சந்தைகள் போன்றவற்றில் மின் சுவர்கள் உருவாக்கப்பட்டு ஒளிபரப்பப்படும்.

**16. அரசு விளம்பரங்கள் வெளியிடும் பணிகள் அனைத்தும் இணையம் வழியாக மேற்கொள்ள மென்பொருள் உருவாக்கவும், பராமரிக்கவும் நடவடிக்கை எடுக்கப்படும்.**

அரசுத் துறைகள் மற்றும் அரசு சார்ந்த நிறுவனங்களின் ஒப்பந்தப்புள்ளிகள் மற்றும் வரைகலை விளம்பரங்களை வெளியிட செய்தித்துறைக்கு இணையம் வாயிலாகப் பதிவேற்றம் செய்தல், வெளியிடுதல், ஊடகங்களுக்கு அனுப்பும் பணிகள், கட்டணம் நேர்செய்யும் பணிகள் அனைத்தும் வெளிப்படைத்தன்மையுடன் இணையம் வாயிலாக மேற்கொள்ளும் வகையில், மென்பொருள் (Software) உருவாக்க, பராமரிக்க, உபகரணங்கள் வாங்க, தொழில்நுட்ப அலுவலருக்கான ஊதியம் வழங்க ஆண்டொன்றுக்கு ரூபாய் ஒன்பது இலட்சத்து எழுபதாயிரம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

**17. தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர். திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனத்தில் கூட்ட அரங்கம் அமைத்தல், பராமரிப்புப் பணிகள், பழுதடைந்தக் கட்டடங்கள் (ம) மின்கலன்கள் சீரமைப்பு மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்படும்.**

தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர். திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனத்தில் கூட்ட அரங்கம் அமைத்தல், பயிற்சிப் பிரிவுகளில் பராமரிப்புப் பணிகள் மற்றும் வர்ணம் பூசுதல், பெயர்ப்பலகை அமைத்தல் பழமையான, பழுதடைந்தக் கட்டடங்களைச் சீரமைத்தல், மின்கலன்கள் சீரமைத்தல் சுகாதார வசதிகளை மேம்படுத்துதல் போன்ற உட்கட்டமைப்புப் பணிகளை மேற்கொள்ள ரூபாய் ஒரு கோடியே ஐம்பத்தி எட்டு இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

# தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை

## மானியக் கோரிக்கை எண்.30

## எழுதுபொருள் மற்றும் அச்சு

அறிவிப்புகள்
2021 – 2022

## 1. அரசு மைய அச்சகம் மற்றும் கிளை அச்சக கட்டடங்கள் புனரமைப்பு

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, பழுதடைந்துள்ள சேலம் அரசு கிளை அச்சக கட்டடம், அரசு மைய அச்சகத்தில் பிரதான அச்சு இயந்திரம் அமைந்துள்ள கட்டடம், திருச்சி அரசு கிளை அச்சக கட்டடம், மதுரை அரசு கிளை அச்சக கட்டடம் மற்றும் விருதாச்சலம் அரசு கிளை அச்சக கட்டடம் ஆகியவை ரூ.4.55 கோடி மதிப்பில் புனரமைக்கப்படும்.

## 2. சென்னை, அரசு மைய அச்சகத்திற்கு சுமையூர்தி ஒன்று கொள்முதல் செய்தல்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி சென்னை, அரசு மைய அச்சகத்தில் அச்சடிக்கப்பட்ட படிவங்கள், பதிவேடுகள், அரசிதழ்கள் மற்றும் நாட்காட்டிகள் ஆகியவற்றை சம்மந்தப்பட்ட அலுவலகங்களுக்கு அனுப்பி வைக்கும் பொருட்டு ரூ.25.80 இலட்சம் மதிப்பில் சுமையூர்தி ஒன்று கொள்முதல் செய்யப்படும்.

## 3. சென்னை அரசு மைய அச்சகத்திற்கு ஒரு காகிதம் சிப்பம் கட்டும் இயந்திரம் (Paper Baling Machine) கொள்முதல் செய்தல்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, அரசு மைய அச்சகத்தில் அச்சுப் பணிகளின்போது ஏற்படும் காகித கழிவுகளை ஒழுங்குப்படுத்த சிப்பம் கட்டும் இயந்திரம் ஒன்று ரூ.5.00 இலட்சம் மதிப்பில் கொள்முதல் செய்யப்படும்.

**“இது ஒரு கட்சியின் அரசாக இல்லாமல் அனைத்து மக்களின் அரசாக இருக்க வேண்டும்”**

– மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்

©

தமிழ்நாடு அரசு

2021